அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 27/99

எனது இல: ஆ1/543ஈ/01/30(11)ஆ,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு-07.
1999.11.30

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்,

1994.07.01 ஆந் திகதியிலிருந்து 1996.12.31 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் இலங்கை தொழில்நுட்பவியல் சேவை வகுப்பு 11பிரிவு 'ஆ'வில் இருந்து வகுப்பு 11 பிரிவு 'அ' வுக்கு தரமுயர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களி சம்பள மாற்றியமைப்பு.

---

1994.07.01 ஆந் திகதி தொடக்கம் 27/94ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மூலம் மத்திய மட்ட தொழில்நுட்ப சேவையை மறுசீரமைக்கும் போது குறித்த சேவையின் 111ஆம் வகுப்பிலிருந்து இலங்கை தொழில் நுட்பவியல் சேவை பிரிவு 11'ஆ'வுக்கு உள்ளீர்க்கப்பட்டு, 1994.07.01 ஆந் திகதியிலிருந்து 1996.12.31 ஆந் திகதி வரையிலான காலத்திற்குள் இலங்கை தொழில்நுட்பவியற் சேவையின் பிரிவு 11'ஆ'விலிருந்து பிரிவு 11'அ'வுக்கு தரமுயர்த்தப்பட்ட உத்தியோகத்தர்கள் 1996.12.31 ஆந் திகதி பெறப்பட்ட சம்பளம் 1997.01.01 ஆந் திகதி மாற்றியமைக்கப்படுகையில் முரண்பாடொன்று எழுந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

02. இம் முரண்பாட்டினை நிவர்த்தி செய்வதற்காக அவ்வுத்தியோகத்தர்களுக்கு மத்திய மட்டத் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 111க்காக 37/92ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையை குறிப்பிடப்பட்டுள்ள எஸ்-3-1 சம்பள அளவுத் திட்டம் தரமுயர்த்தப்பட்ட திகதி வரை தொடர்ந்து நடைமுறையிலிருந்ததாகக் கருதப்பட வேண்டும். மேலும் அவர்கள் மத்திய மட்டத் தொழில்நுட்பச் சேவையின் பிரிவு 11'ஆ'வுக்கு தரமுயர்த்தப்பட்டவர்களாகக் கருதி அவ்வாறு தரமுயர்த்தப்பட்ட திகதியிலிருந்து 37/92ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் எஸ்-3-2ஆம் சம்பள அளவுத் திட்டத்திற்கு அவர்களின் சம்பளங்களை மாற்றியமைக்க வேண்டும். மேலும் அவர்கள் 1996.12.31 ஆந் திகதி வரை வேதன வேற்றங்களை உழைத்துப் பெற்றிருந்தால், மத்திய மட்டத் தொழில்நுட்பச் சேவையின் பிரிவு 11'ஆ'வுக்கு ஏற்புடைய சம்பள அளவுத் திட்டத்தின் குறித்த வேதன வேற்றங்களின் பெறுமதிகளையும் கருதுகின்ற அடிப்படையில் சேர்க்க வேண்டும். ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் 1997.01.01 ஆந் திகதியிலிருந்து ஏற்புடையதாக 40% வீத அதிகரிப்பின் கீழ் செலுத்த வேண்டிய சம்பளத்தை நிர்ணயிப்பதற்காக திருத்திய அடிப்படையில் 1997.01.01ஆந் திகதியிலிருந்து உரியதான சம்பளத்திற்கு நேரொத்த 1996.12.31ஆந் திகதிக்கு கருதியவாறான சம்பளத்தை (2/97(111)ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 73ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ரீ-3-2-1 சம்பளத் தொகுதியின் 1996.12.31ஆந் திகதிக்கு நேரொத்த சம்பளப் படிநிலையை கருதுகின்ற அடிப்படையில்) பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உதாரணம்:

'ஏ' என்பவர் 37/92ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் எஸ்-3-1 சம்பள அளவுத் திட்டத்தின் ம.ம.தொ.சே.வகுப்பு 111இன் உத்தியோகத்தர் ஒருவராக 1994.02.08 ஆந் திகதியில் ரூபா 34080/- சம்பளப் படிநிலையில் அமர்த்தப்பட்டிருந்தார். 27/94 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் இவர் 1994.07.01 ஆந் திகதி இலங்கை தொழில் நுட்பவியல் சேவையின் பிரிவு 11'ஆ'வுக்கு உள்ளீர்க்கப்பட்டதுடன், அன்று தொடக்கம் ரூபா 30060-5X660 -11X780-41940 சம்பள அளவுத் திட்டத்தின் ரூபா 37260/- சம்பளப் படிநிலையில் அமர்த்தப்பட்டார். 1995.02.08 மற்றும் 1996.02.08 ஆந் திகதிய வேதனவேற்றங்களுடன் ரூபா 38820/- பெற்றுக் கொண்டிருக்கையில், 1996.09.30 ஆந் திகதி தொடக்கம் ரூபா 37200-4X780-14X1200-57120 சம்பள அளவுத் திட்டத்திற்கு உரியதான இலங்கை தொழில் நுட்பவியல் சேவையின் பிரிவு 11"அ"வுக்கு தரமுயர்த்தப்பட்டார். அதன்படி அவருக்கு பின்வருமாறு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

| திகதி | சம்பள அளவுத் திட்டம் | சேவையும் தரமும் | சம்பளப் படிநிலை | சுற்றறிக்கை |
|---|---|---|---|---|
| 1994.02.08 | ரூபா 27120-7x660-10x 780- 39540 | ம.ம.தொ. சே.111 | ரூ.34080 | அ.நி.சு. இல.37/92 |
| 1994.07.01 | ரூபா 30060-5x660-11x 780-41940 | இ.தொ.சே. 11ஆ | ரூ.37260 | அ.நி.சு. இல.27/94 |
| 1995.02.08 | --------அதே------- | இ.தொ.சே. 11ஆ | ரூ.38040 (வே.ஏ) | " |
| 1996.02.08 | --------அதே-------- | --அதே--- | ரூ.38820 | " |
| 1996.09.30 | ரூபா37200-4x780-14x 1200-57120 | இ.தொ.சே. 11அ | ரூ.40320 | அ.நி.சு. இல.27/94 சம்பளமாற்றிய -மைப்பு 11/94ஆம். |
| 1997.01.01 | ரூபா58440-1x1320-13x 1560-80040 | இ.தொ.சே 11அ | * ரூ.64440 | அ.நி.சு. இல.2/97 (111) * |
| 1998.01.01 | --------அதே------- | --அதே--- | ரூ.66000 (97.09.30 வேதனவேற்றத் துடன்) | |

* 1997.01.01 திகதியிலிருந்து செலுத்துகின்ற சம்பளம் 40%வீத அதிகரிப்பின் கீழ் இவ்உத்தியோகத்தருக்கு பதவி உயர்வு கிடையாதிருந்திருந்தால் பெறக்கூடியதாக இருந்த சம்பளம் பின்வருமாறு;